Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
E-Mail: collegehouse_mdu@yahoo.co.in
College House Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 53 | உள்ளூர் - 22.02.2026 | ஞாயிறு | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 53 | வெளியூர் - 23.02.2026 | திங்கள் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


சந்திர கிரகணம் 2026: 12 ராசிக்கு எப்படி இருக்கும்?

பஞ்சாப் நேஷனல் பேங்க் 5138 காலியிடங்கள்!

தமிழகத்திற்கு கனமழை எச்சரிக்கை?

டிரம்ப்-ன் "பேக்அப் பிளான்"

## நமோ பாரத்! அதிவேக மெட்ரோ ரயில் சேவை.. பிரதமர் மோடி வைத்தார்!



புதுடெல்லி,பிப். 22–

நாட்டில் அதி விரைவு மெட்ரோ ரயில் சேவையான நமோ பாரத் ரயில் சேவை பிரதமர் நரேந்திர மோடி இன்று (பிப்.22 )தொடங்கி வைத்தார். நாட்டில் முதல்முறையாக குஜராத்தின் அகமதாபாத் – புஜ் நகரங்களுக்கு இடையே 'நமோ பாரத் ரேபிட் ரயில்' சேவையை பிரதமர் மோடி கடந்த 2024 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார்.

அதேபோன்று, உத்தரப் பிரதேச மாநிலம் மீரட்டில் உள்ள சதாப்தி நகர் நமோ பாரத் ரயில் நிலையத்தில் இருந்து தில்லி–காஜியாபாத் – மீரட் நமோ பாரத் வழித்தடத்தின் மீதமுள்ள 27 கி.மீ. நீளப் பாதையை பிரதமர் நரேந்திர மோடி இன்று (பிப்.22 )தொடங்கி வைத்தார்


இது தில்லி மற்றும் மீரட்டை இணைக்கும் இந்தியாவின் முதல் முழுமையாக செயல்படும் 82.15 கி.மீ. கொண்ட மெட்ரோ ரயில் பாதையாகும். தில்லி காஜியாபாத்மீரட் நமோ பாரத் வழித்தடத்தில் மொத்தம் 16 நிலையங்கள் உள்ளன. அவற்றில் தற்போது 11 நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. மதியம் மீரட்டுக்குச் செல்லும் பிரதமர் மோடி, நமோ பாரத் ரயிலை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். அங்கிருந்து மீரட் தெற்கு மெட்ரோ ரயில் நிலையம் வரை அவர் பயணம் செய்தார்

பிற்பகல் 1 மணியளவில், மீரட்டில் சுமார் ரூ.12,930 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்து விழாவில் உரையாற்றினார்.

சுமார் 82 கி.மீ. நீளமுள்ள தில்லியில் இருந்து மீரட் நமோ பாரத் வழித்தடத்தை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். இந்தியாவின் முதல் நமோ பாரத் விரைவு ரயிலானது மணிக்கு 180 கி.மீ வேகத்தில் செல்லும் இந்தியாவின் முதல் ரயில் என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

இது சாஹிபாபாத், காஜியாபாத், மோடிநகர் மற்றும் மீரட் போன்ற முக்கிய நகர்ப்புற மையங்களை தில்லியுடன் இணைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மக்கள் போற்றும் மகத்தான தலைவர் ஜெயலலிதா! "மனதின் குரல்" நிகழ்ச்சியில் பிரதமர் மோடி புகழாரம்!



புதுடெல்லி, பிப். 22–

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மக்கள் போற்றும் மகத்தான தலைவர் என பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் மோடி பதவியேற்ற பிறகு, 'மனதின் குரல்' (மான் கீ பாத்) என்ற தலைப்பில் மாதந்தோறும் கடைசி வாரம் ஞாயிற்றுக்கிழமை நாட்டு மக்களிடம் வானொலியில் வாயிலாக உரையாற்றி வருகிறார். அதன்படி, இன்று (பிப். 22) 131–வது எபிசோடில் பங்கேற்று உரையாற்றினார். இந்த மனதில் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மக்கள் மகத்தான தலைவர் என புகழாரம் சூட்டிப் பேசியுள்ளார். இதுகுறித்து பிரதமர் மோடி பேசுகையில், "முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மக்கள் போற்றும் மகத்தான தலைவர். அவருடனான நட்பு பசுமரத்தாணி போல எனது நெஞ்சில் இடம்பெற்றிருக்கிறது.

ஜெயலலிதா ஆற்றிய சேவைகள் என்றும் நினைவில் இருக்கும், பெண்கள் சக்தியின் வெளிப்பாடாகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க கடும் நடவடிக்கைகளை எடுத்தார் ஜெயலலிதா.

பிப். 24 ஆம் தேதி அவரது பிறந்தநாள் விழா. இன்றும் கூட, நான் தமிழ்நாட்டிற்குச் செல்லும்போது, தமிழக மக்கள் ஜெயலலிதா மீது வைத்திருக்கும் பற்றை நான் உணர்ந்திருக்கிறேன். ஜெயலலிதாவைப் பற்றி பேசும்போது மக்களிடம் ஒரு புத்துணர்வைப் பார்க்க முடிகிறது.

குஜராத் முதல்வராக நான் பதவியேற்றபோதெல்லாம் எனது பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் ஜெயலலிதா.

நான் முதல்வராக இருந்தபோது குஜராத்துக்கு பல உதவிகளை செய்தார். அவர் நாட்டின் மீதும் பெரிய பற்றுக் கொண்டிருந்தார்" என்றார்.

தமிழ்நாடில் இன்னும் ஓரிரு மாதங்களில் சட்டப் பேரவைக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதிமுக – பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி தீவிரமாக அரசியல் பணியாற்றி வருகிறது. இந்த நிலையில், அதிமுக முன்னாள் பொதுச் செயலரும் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதாவைப் புகழ்ந்து பிரதமர் மோடி, மனதில் குரல் நிகழ்ச்சி யில் பேசியு ள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## உக்ரைன் தலைநகரில் ரஷ்யா குண்டுமழை!



கீவ், பிப். 22–

உக்ரைன் நாட்டின் கீவ் நகரில் இன்று (பிப்.22) அதி காலை விடியல் பொழுதுக்கு முன்பாக பாலிஸ்டிக் ஏவுக ணை உள்ளிட்டவற்றை கொண்டு ரஷ்யா மிக கடுமையாக தாக்குதல் மேற்கொண்டதாக தகவல் கிடைத்துள்ளது.

முன்னதாக, இந்த தாக்குதல் குறித்து உக்ரைன் அதிகாரிகள் மக்களை எச்சரித்துள்ளனர். சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றின் செய்தியாளர்கள், ஞாயி ற்றுக்கிழமை அதிகாலை 4 மணி அளவில் கீவ் நகரில் வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறும் சப்தத்தை கேட்டதாக தெரிவித்தனர். அதற்கு முன்பாக வான்வழி தாக்கு தலுக்கான எச்சரிக்கை ஒலி கீவ் நகரில் ஒலித்து ள்ளது. "பாலிஸ்டிக் ஏவுக ணை உள்ளிட்ட ஆயுத ங்களை கொண்டு தலைந கரை எதிர் தரப்பு தாக்குகி றது" என கீவ் ராணுவ நிர்வா கத்தின் தலைவர் தைமூர் தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்தார். மேலும், மக்கள் பாதுகாப்பான இடத்தில் இருக்குமாறு ம் அவர் அறிவுறுத்தினார். அதை யடுத்து உக்ரைன் முழுவதும் வான்வழி தாக்குதல் குறித்த எச்சரி க்கையை அந்நாட்டு வான்படை விடுத்தது. இந்த தாக்குதலில் குடியிருப்பு களின் மேற்கூரை தீ பிடித்து எரிந்ததாக தகவல்.

## ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல்- 20 பயங்கரவாதிகள் பலி!

பாகிஸ்தான், பிப். 22–

பாகிஸ்தான் ராணுவம் இன்று அதிகாலை ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் வான்வழித் தாக்குதலை நடத்தியது.

பாகிஸ்தான் ராணுவத்தினர் நடத்திய வான்வழி தாக்குதலில் ஆப்கான் பயங்கரவாதிகள் 20 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆப்கானிஸ்தான் எல்லையில் பயங்கரவாதிகள் தங்குமிடத்தை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

பயங்கரவாதிகளின் மறைவிடங்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. தற்போது நடத்தப்பட்டுள்ள இந்த வான்வழித் தாக்குதல் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தும். சமீபகாலமாக பாகிஸ்தானுக்குள் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 15% வரி..

## டிரம்ப்-ன் "பேக்அப் பிளான்" இரவோடு இரவாக 2 சட்டம்..

### 2 முறை வரி உயர்வு..!!



அமெரிக்கா, பிப். 22–

அமெரிக்காவின் வர்த்தகக் கொள்கையில் மீண்டும் பெரிய மாற்றத்தை டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்க உச்சநீதிமன்றம் டிரம்ப் அறிவித்த சுங்கவரியும் அதை அமலாக்கம் செய்த முறையும் முற்றிலும் சட்டவிரோதம் என தீர்ப்பளித்ததற்குப் பின்னர், புதிய சட்டப் பிரிவுகளின் கீழ் சுங்கவரி விதிப்பதாக டிரம்ப் அறிவித்துள்ளார். இதன் படி டிரம்ப் உலக நாடுகளுக்கு 10% அடிப்படை சுங்கவரியை முதல்கட்டமாக விதித்திருந்த நிலையில், அதை 15% ஆக உயர்த்தி உடனடி அமலுக்கு கொண்டு வருவதாக சனிக்கிழமை அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு, உலகளாவிய வர்த்தகத்தில் மீண்டும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. இதுக்குறித்து டிரம்ப் தனது சமுக வலைத்தள பதிவில் "பல ஆண்டுகளாக அமெரிக்காவை பொருளாதார ரீதியாக பயன்படுத்திக் கொண்ட நாடுகளுக்கு பதிலடி" என குறிப்பிட்டுள்ளார். டிரம்ப் அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பின் போது தன்னிடம் பேக்அப் பிளான் இருப்பதாக அறிவித்த நிலையில், தற்போது 15 சதவீத வரியை புதிய சட்ட பிரிவின் கீழ் அமலாக்கம் செய்யப்பட்டு உள்ளது. இந்த புதிய அறிவிப்பின் மூலம், ஏற்கனவே அமலில் இருந்த சுங்கவரிகளுக்கு மேலாக 10% உலகளாவிய வரி விதிக்கப்படுமெனவும், அதோடு தேசிய பாதுகாப்பு மற்றும் பிற வர்த்தகச் சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட அனைத்து சுங்கவரிகளும் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார்.


Section 122 சட்டம் 1974ஆம் ஆண்டு வர்த்தகச் சட்டத்தின் கீழ் உள்ள Section 122, அதிபருக்கு "Balance of Payments Emergency" என்ற பெயரில் தற்காலிக இறக்குமதி கூடுதல் வரி விதிக்கும் அதிகாரத்தை வழங்குகிறது. இந்த பிரிவின் கீழ் அதிகபட்சம் 15% வரை சுங்கவரி விதிக்கலாம். ஆனால் இந்த நடவடிக்கை 150 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதன் பின்னர் நீட்டிக்க வேண்டுமெனில் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டியது அவசியம். இதன் மூலம், உடனடி பொருளாதார அழுத்தத்தை சமாளிக்க தற்காலிக தீர்வாக சுங்கவரி விதிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் இது நிரந்தர தீர்வாக அமையாது.

Section 232 சட்டம் 1962ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வர்த்தக விரிவாக்கச் சட்டத்தின் Section 232, தேசிய பாதுகாப்பு காரணத்தைக் காட்டி சுங்கவரி அல்லது இறக்குமதி கட்டுப்பாடுகளை விதிக்க அனுமதிக்கிறது. இந்த பிரிவில் 15% என்ற வரம்போ, 150 நாள் காலவரம்போ இல்லை. ஆனால் இதற்கு முன் விசாரணை நடத்தப்பட வேண்டும். 270 நாட்களுக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்னர் அதிபர் 90 நாட்களில் முடிவு எடுக்க வேண்டும். முடிவு எடுத்தால், 15 நாட்களுக்குள் அது அமல்படுத்தப்படலாம். இங்கு காங்கிரஸ் ஒப்புதல் அவசியமில்லை; அதிபர் எழுத்து விளக்கம் அளிப்பது போதுமானது.

**உலக சந்தைகளுக்கு என்ன பாதிப்பு?**

இந்த அறிவிப்பு உலகளாவிய வர்த்தக உறவுகளில் புதிய பதற்றத்தை உருவாக்கியுள்ளது. 15% உலகளாவிய சுங்கவரி அமல்பட்டால், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பொருட்கள் அதிக விலையாகும். இது இந்தியா உள்ளிட்ட பல வளர்ந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு சவாலாக அமையலாம். மொத்தத்தில், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பதிலடி என்ற வகையில் டிரம்ப் எடுத்துள்ள இந்த புதிய நடவடிக்கை, அமெரிக்கா–உலக வர்த்தக உறவுகளில் புதிய கட்டத்தைத் தொடங்கியுள்ளது. வருங்காலத்தில் காங்கிரஸ் மற்றும் நீதிமன்றத்தின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பது உலக முதலீட்டாளர்களின் கவனத்தில் உள்ளது.

## பத்திரிகையால் மோசடி புகாரில் சிக்கினார் செல்வப்பெருந்தகை!




சென்னை, பிப். 22–

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ., செல்வ ப்பெருந்தகை, தேர்தலில் மோசடி செய்து வெற்றி பெற்றுள்ளதால் அவர் மீது கடும் நடவடிக்கை வேண்டும் என்று பாஜ தலைமை செய்தி தொடர்பாளர் நாராயணன் திருப்பதி கூறியுள்ளார்.

**அவரது அறிக்கை:**

இணைக்கப்பட்டுள்ள திருமண நிச்சயதார்த்த அழைப்பிதழானது காங்கிரஸ் கட்சி தலைவரும், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை மகளின் நிச்சயதார்த்த அழைப்பிதழ். மணம் முடிக்க காத்திருக்கும் மணமக்களுக்கு நம் வாழ்த்துகளும், ஆசிகளும்.

இந்த அழைப்பிதழ் செல்வப்பெருந்தகையால் பதிவு செய்யப்பட்டது. இந்த அழைப்பிதழின் வாசகங்கள் செல்வப்பெருந்தகை கிருஸ்துவ மதத்தை சார்ந்தவர் என்பதை உறுதிபட தெரிவிக்கின்றது.

செல்வப்பெருந்தகை கிருஸ்துவராகவோ, இஸ்லாமியராகவோ, ஹிந்துவாகவோ இருப்பதில் நமக்கு எந்த பிரச்னையும் இல்லை, ஆட்சேபனையும் இல்லை.

ஆனால், ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற தொகுதியானது, பட்டியலின சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதி (Reserved Constituency) ஆகும். அந்த தொகுதியில் பட்டி யலினத்தை சார்ந்தவர்கள் மட்டுமே போட்டியிட வேண்டும். தாங்கள் கிறிஸ்துவ மதத்தை பின்பற்றுபவர் என்பதை மறைத்து, ரிசர்வ் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவரை தகுதி நீக்கம் செய்யும் வகையில் பல்வேறு தீர்ப்புகள் ஏற்கனவே நீதிமன்றங்களால் வழங்கப்பட்டுள்ளன.

செல்வப்பெருந்தகை , உண்மையை மறைத்து இந்திய அரசியலமைப்பு சட்டத்தை மீறி, மோசடி

செய்து தேர்தலில் போட்டியிட்டிருப்பது தெளிவாகிறது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் இந்த மோசடியில் ஈடுபட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது மட்டுமல்ல; வெட்கக்கேடான செயல். பட்டியலின மக்களுக்கு காங்கிரஸ் கட்சி செய்துள்ள மிகப்பெரிய துரோகமாகும்.

தெரிந்தே இந்த குற்றச்செ யலில் ஈடு பட்டுள்ள செல்வப்பெரு ந்தகை பதவி விலக வேண்டும், காங்கிரஸ் கட்சி பட்டியிலின மக்களிடம் மன்னிப்பு கேட்பதோடு, செல்வப்பெருந்தகையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். செல்வப்பெருந்தகை வெற்றி செல்லாது என்பதை சட்ட ரீதியாக உறுதி செய்வதோடு, அரசிய லமைப்பு சட்டத்தை மீறிய குற்றத்திற்காக செல்வப்பெரு ந்தகையின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு நாராயணன் திருப்பதி அறிக்கையில் கூறியுள்ளார்.

**சட்டம் சொல்வது என்ன?**

சட்டத்தின்படியும், உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் ஆகிய வற்றின் முந்தைய உத்தரவுகளின்படியும், மதம் மாறிய ஒருவர், தாழ்த்தப்ப ட்டவருக்கான சலுகையை பெற முடியாது. அதாவது, ஹிந்துவாக இருந்து இஸ்லாமியர் அல்லது கிறிஸ்தவராக மதம் மாறியவர், தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சலுகையை தொடர்ந்து பெற தகுதியற்றவர். எனவே செல்வப் பெருந்தகை தெரிந்தே இந்த மோசடியை செய்துள்ளார் என்பது, அவர் வெளியிட்டுள்ள அழைப்பிதழ் மூலம் தெளிவாகிறது என்பது பாஜ குற்றச்சாட்டு.


**தாழ்த்தப்பட்டவரே கிடையாது!**

2021 பிப்.,12ல் ராஜ்ய சபாவில் உறுப்பினர் ஒருவர் கேள்விக்கு பதிலளித்த சட்ட அமைச்சர், 'இஸ்லாம் அல்லது கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய ஒருவர், தாழ்த்தப்பட்டவருக்கான சலுகையை பெற முடியாது. தாழ்த்தப்பட்டவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதியிலும் போட்டியிட முடியாது. 'இந்தியாவில், ஹிந்து, சீக்கியர், பவுத்தர் அல்லாத மதத்தை சேர்ந்த ஒருவர், தாழ்த்தப்பட்ட வருக்கான சலுகையை பெற முடியாது' என்று தெரிவித்துள்ளார்.

## தலையங்கம்

மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 22.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 10-ம் தேதி

## இந்த சிம் கார்டு மோசடி பற்றி தெரியுமா? கவனமா இல்லன்னா.. சட்ட சிக்கல்களை சந்திக்க நேரிடும்..!



தற்போதைய டிஜிட்டல் யுகத்தில், மொபைல் போன்கள் மற்றும் சிம் கார்டுகள் நமது அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாகிவிட்டன. புதிய சிம் கார்டு பெறுவதும், நெட்வொர்க் சிக்கல்களை சரிசெய்வதும் பொதுவான விஷயங்கள். இருப்பினும், இந்த செயல்பாட்டில், ஆதார் அட்டையின் தவறான பயன்பாடு அதிகரித்துள்ளது, மேலும் நமக்குத் தெரியாமல் கூடுதல் சிம் கார்டுகள் நம் பெயரில் பதிவு செய்யப்படுகின்றன, இது கவலைக்குரிய விஷயம். சமீபத்தில், பலர் தங்கள் ஆதாரில் அங்கீகரிக்கப்படாத சிம் கார்டுகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

**இந்த மோசடி எப்படி நடக்கிறது?**

பொதுவாக, ஒருவர் புதிய சிம் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்கள் தங்கள் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை சமர்ப்பிக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், இந்த நகல்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. மோசடி செய்பவர்கள் கூடுதல் சிம் கார்டுகளைப் பெற ஒரு நகலை மட்டுமே பயன்படுத்தலாம். இந்த சிம் கார்டுகள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்போது, அசல் ஆதார் அட்டை வைத்திருப்பவர் சட்ட சிக்கல்களுக்கு ஆளாக நேரிடும். பலர் தங்கள் பெயரில் ஒரே ஒரு சிம் மட்டுமே இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில், அவர்கள் தங்கள் ஆதாரில் டஜன் கணக்கான சிம்களைப் பதிவு செய்திருக்கலாம்.

**அரசாங்கம் வழங்கும் தீர்வு: TAFCOP போர்டல்:**

இதுபோன்ற மோசடிகளைத் தடுக்கவும், குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இந்திய அரசு tafcop.sancharsaathi.gov.in என்ற சிறப்பு வலைத்தளத்தைத் தொடங்கியுள்ளது. மோசடி மேலாண்மை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக்கான இந்த தொலைத்தொடர்பு பகுப்பாய்வு (TAFCOP) போர்டல் பயனர்கள் தங்கள் ஆதார் எண்ணில் எத்தனை மொபைல் இணைப்புகள் செயலில் உள்ளன என்பதைச் சரிபார்க்க அனுமதிக்கிறது.

**TAFCOP மூலம் உங்கள் சிம் கார்டுகளை எவ்வாறு சரிபார்க்க வேண்டும்?**

வலைத்தளம்: முதலில் உங்கள் பிரவுசரில் tafcop.sancharsaathi.gov.in என்ற வலைத்தளத்தைத் திறக்கவும்.

மொபைல் எண் பதிவு: வலைத்தளத்தில் தோன்றும் பெட்டியில் உங்கள் தற்போதைய மொபைல் எண்ணை உள்ளிடவும். அது உங்கள் ஆதாருடன் இணைக்கப்பட்ட எண்ணாக இருக்க வேண்டும்.

OTP சரிபார்ப்பு: நீங்கள் உள்ளிட்ட எண்ணில் ஒரு முறை கடவுச்சொல் (OTP) பெறுவீர்கள். தொடர்புடைய பெட்டியில் OTP ஐ உள்ளிட்டு சரிபார்க்கவும்.

பதிவுசெய்யப்பட்ட சிம் கார்டுகளின் பட்டியல்: OTP சரிபார்ப்பு முடிந்ததும், உங்கள் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அனைத்து மொபைல் எண்களின் பட்டியல் திரையில் தோன்றும்.

அங்கீகரிக்கப்படாத எண்களைக் கண்டறிந்து புகாரளிக்கவும்: இந்தப் பட்டியலில் நீங்கள் அடையாளம் காணாத அல்லது நீங்கள் பயன்படுத்தாத எண்கள் ஏதேனும் இருந்தால், அவற்றை அடையாளம் காணவும். ஒவ்வொரு அங்கீகரிக்கப்படாத எண்ணுக்கும் அடுத்ததாக எனது எண் அல்ல அல்லது இது எனது எண் அல்ல என்ற விருப்பம் உள்ளது. அதைத் தேர்ந்தெடுக்கவும்.

புகார் பதிவு: தேர்ந்தெடுத்த பிறகு, அறிக்கை பொத்தானைக் கிளிக் செய்யவும். உங்கள் புகார் பதிவு செய்யப்படும். மேலும், தொலைத்தொடர்பு அதிகாரிகள் அதன் மீது நடவடிக்கை எடுப்பார்கள். இது அங்கீகரிக்கப்படாத சிம் கார்டுகளை ரத்து செய்ய உதவும்.

TAFCOP போர்டல் சிம் கார்டு மோசடி மற்றும் ஆதார் தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இந்த வலைத்தளத்தை தொடர்ந்து சரிபார்ப்பதன் மூலம், உங்கள் தனிப்பட்ட தகவல்களை தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கலாம். உங்கள் ஆதார் அட்டையை ஜெராக்ஸ் அல்லது வேறுவிதமாக தனிப்பட்ட விவரங்களை வழங்கும்போது கவனமாக இருப்பது உங்கள் பொறுப்பு.

# அதிபர் டிரம்பிற்கு எதிராக போர்க்கொடி தூக்கும் ஆளுநர்கள்!



அமெரிக்கா, பிப். 22– அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் இந்தியா, சீனா உள்பட 75–க்கும் மேற்பட்ட நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதித்தார். அமெரிக்கா மீது பல நாடுகள் அதிக வரிகளை விதிப்பதாக குற்றம்சாட்டி இந்த வரி நடவடிக்கையை மேற்கொண்டார். சர்வதேச அவசர பொருளாதார அதிகார சட்டம் 1977–ன் கீழ் இந்தப் பரஸ்பர வரி விதிப்பை டிரம்ப் அமல்படுத்தினார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது அதிகாரத்தை மீறி செயல்படுகிறார் எனக்கூறி அவர் விதித்த வரிகளை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.

இதற்கிடையே, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை எட்டிய நாடுகள் பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட வரிகளுக்குப் பதிலாக தற்போது புதிய 10 சதவீத வரிகளை எதிர்கொள்வார்கள் என தெரிவித்தார்.

அதிபர் டிரம்ப் ட்ரூத் சோஷியல் தளத்தில் வெளியிட்ட அறிவிப்பில், இந்த வரி விகிதத்தை 15 சதவீதமாக உயர்த்த உள்ளதாக அதிரடியாக அறிவித்தார்.

இந்தப் புதிய 15 சதவீத வரி விதிப்பானது பிப்ரவரி 24–ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலக நாடுகள் மீதான ட்ரம்ப்பின் அதீத வரிவிதிப்பை, அமெரிக்க உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ள நிலையில், அதன் அடிப்படையில் வசூலிக்கப்பட்ட பல பில்லியன் கோடி டாலர் பணத்தை திரும்ப வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. அதிக வரி விதிப்பால், மக்களுக்கு ஏற்பட்ட விலை உயர்வு சட்டவிரோதமானது என இலினாய்ஸ் ஆளுநர் JB Britzker, கலிபோர்னியா ஆளுநர் Gavin Newsom நியூயார்க் ஆளுநர் Kathey Hochul ஆகியோர் காட்டமாக உள்ளனர்.

# பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள காஷ்மீர் செல்கிறார் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன்!



காஷ்மீர், பிப். 22– காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் 21–வது பட்டமளிப்பு விழா அடுத்த வாரம் 26–ந்தேதி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வளாகத்தில் நடைபெற உள்ளது. இந்த பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார். இதற்காக அவர் வரும் 26–ந்தேதி காஷ்மீர் செல்ல உள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக செய்தி தொடர்பாளர் கூறுகையில், ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநரும், கென்யா பல்கலைக்கழக வேந்தருமான மனோஜ் சின்ஹா பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்குகிறார். காஷ்மீர் முதலமைச்சரும், துணை வேந்தருமான உமர் அப்துல்லா பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 59,558 பட்டங்கள் – 44,910 இளங்கலை, 13,545 முதுகலை, 461 எம்.பில்/எம்.எஸ், 4 எம்.சி.எச், 18 எம்.ஃபில் மற்றும் 620 பி.எச்டி பட்டங்கள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

துணை ஜனாதிபதி வருகையையொட்டி காஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல் அதிகாரி வி.கே.பிரிடி ஆய்வு செய்தார்.

பள்ளத்தாக்கின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தவும், முக்கிய நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் 24 மணி நேரமும் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தவும், கண்காணிப்பை வலுப்படுத்தவும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# SIR பணிகள் நிறைவு - இறுதி வாக்காளர் பட்டியல் பிப். 23-ல் வெளியீடு!





சென்னை, பிப். 22– வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட டிசம்பர் 19–ந்தேதி முதல் பிப்ரவரி 10–ந்தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க மற்றும் திருத்தம் செய்வதற்கான அவகாசம் வழங்கப்பட்டது.

பட்டியலில் பெயர் சேர்க்க 17.10 லட்சம் பேரும், நீக்கம் செய்யக்கோரி 1.84 லட்சம் பேரும், திருத்தம் கோரி 5.51 லட்சம் பேரும் என மொத்தம் 24.47 லட்சம் வாக்காளர்கள் படிவங்களை பூர்த்தி செய்து வழங்கியிருந்தனர்.

அதேபோல், இணையதளம் வழியாக 10.28 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். ஆக மொத்தமாக 34 லட்சத்து 75 ஆயிரத்து 717 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்களை வாக்காளர் பதிவு அலுவலர்கள் மூலம் சரி செய்யும் பணி கடந்த 10–ந்தேதி நிறைவடைந்தது.

வரைவு வாக்காளர் பட்டியலில், நிரந்தரமாக குடிபெயர்ந்தவர்கள் என்று காட்டப்பட்ட 66 லட்சத்து 44 ஆயிரத்து 881 பேர், மீண்டும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல் கமிஷன் தெரிவித்திருந்தது. ஆனால் சுமார் 23 லட்சம் பேர் மட்டுமே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். அதன்படி கணக்கிடும்போது தமிழகத்தில் 5 கோடியே 65 லட்சம் என்ற அளவில் வாக்காளர்கள் எண்ணிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில் இறுதி வாக்காளர் பட்டியல் நாளை வெளியிடப்பட உள்ளது.

மாவட்டங்களில் நாளை காலை 10 மணிக்கு மேல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். பின்னர் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மாநிலம் முழுவதும் உள்ள இறுதி வாக்காளர் பட்டியல் தரவுகளை வெளியிடுவார்.

# திருப்பத்தூரில் பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் - ன் புதிய 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்ஸ் ஆரம்பம்!


திருப்பத்தூர், பிப். 22– இந்தியாவின் முன்னணி ஸ்பிரிங் மெத்தை பிராண்டான Peps Industries Private Limited, திருப்பத்தூர் பாச்சல் ரோடு, வாணியம்பாடி ரோடு, லட்சுமி நகரில் புதிய 'பெப்ஸ் கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' திறந்து வைத்து தமிழ்நாட்டில் தனது சில்லறை வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. 20–வது ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்ட இந்த ஸ்டோர், பிரீமியம் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட மெத்தைகள், தலையணைகள் மற்றும் தூக்க உபகரணங்களை வாடிக்கையாளர்களுக்கு அருகிலேயே வழங்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்டோரை விற்பனைப் பிரிவு பொது மேலாளர் திரு. எஸ். ராஜேஷ் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக திருப்பத்தூர் விஜய் கேலக்ஸி திரு. எம். மதியழகன் மற்றும் திருப்பத்தூர்



ரெயின்போ டிவி சென்டர் திரு. கே. ஜி. தியாகரன் ரெட்டி கலந்து கொண்டனர். நவீன அனுபவ ஸ்லீப் சென்டராக வடிவமைக்கப்பட்டுள்ள இங்கு ஸ்பிரிங், ஃபோம், கயிறு மெத்தைகள், தலையணைகள், பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பெப்ஸ் கம்ஃபோர்ட், பெப்ஸ் சுப்ரீம், பெப்ஸ் ரெஸ்டோனிக் மெமரி ஃபோம், பெப்ஸ் சுப்பீரியர் ஸ்பிரிங் ரேஞ்ச் போன்ற தயாரிப்புகள் முதுகுத்தண்டுக்கு ஆதரவு, அழுத்த நிவாரணம் மற்றும் நீடித்த சௌகரியம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 5,000–க்கும் மேற்பட்ட மல்டி–பிராண்ட் அவுட்லெட்டுகள் மற்றும் 110–க்கும் மேற்பட்ட கிரேட் ஸ்லீப் ஸ்டோர்களுடன், கோயம்புத்தூரில் 11 ஏக்கர் பரப்பளவிலான உற்பத்தி வளாகம் கொண்ட பெப்ஸ், புதுமை மற்றும் தரநிலையுடன் தனது வளர்ச்சியை தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.



# சந்திர கிரகணம் 2026: 12 ராசிக்கு எப்படி இருக்கும்?



2026 ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம் வருகிற மார்ச் 3 ஆம் தேதி நிகழப் போகிறது. இந்த சந்திரகிரகணம் ஒரு வானியல் நிகழ்வு மற்றும் முக்கிய ஜோதிட நிகழ்வாக பார்க்கப்படுகிறது. மார்ச் 3 ஆம் தேதி நிகழப் போகும் சந்திர கிரகணம் இந்தியாவில் பிற்பகல் 3:20 மணிக்கு தொடங்கி மாலை 6:47 மணிக்கு முடிவடையும். இதன் விளைவாக, சந்திர கிரகணம் 3 மணி நேரம் 27 நிமிடங்களுக்கு நீடிக்கும், இதன் சூதக காலம் காலை 6:20 மணிக்கு தொடங்கும்.

**இந்தியாவில் சந்திர கிரகணம் எங்கு தெரியும்?**

2026 ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம் மார்ச் 3 ஆம் தேதி இந்தியாவிலும் உலகெங்கிலும் உள்ள பல நாடுகளிலும் தெரியும். இந்தியாவில், இந்த சந்திர கிரகணம் டெல்லி, உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தானில் தெரியும். இது வடகிழக்கு மாநிலங்களான அசாம், அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளிலும் தெரியும். இந்தியாவைத் தவிர, இந்த சந்திர கிரகணம் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ரஷ்யா, வடக்கு மற்றும் தென் அமெரிக்காவிலும் தெரியும்.

2026 ஆம் ஆண்டு சந்திர கிரகணத்தின் தாக்கம் ராசிகளில் எப்படி இருக்கும்

2026 ஆம் ஆண்டு முதல் சந்திர கிரகணத்தின் தாக்கம் 12 ராசிகளிலும் எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொள்வோம்.

மேஷ ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – உங்களின் உணர்ச்சிகள் ஏற்ற இறக்கங்களுடன் இருக்கும். எனவே அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். நண்பர்களுடனும் நெட்வொர்க்கிங் செய்யும் போதும் கவனமாக இருங்கள்.

ரிஷப ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – தொழில் மற்றும் நற்பெயரில் திடீர் மாற்றங்கள் ஏற்படக்கூடும். மூத்தவர்களுடன் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து, பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

மிதுன ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – வெளிநாட்டு பயணம் மற்றும் உயர்கல்வி தொடர்பான விஷயங்களில் குழப்பங்கள் ஏற்படலாம். மத/ஆன்மீக சிந்தனை மாறக்கூடும்.

கடக ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – நிதி விஷயங்கள் மற்றும் முதலீடுகளில் எச்சரிக்கையாக இருங்கள். உறவுகளில் தெளிவு அவசியம்.

சிம்ம ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – திருமண உறவுகளில் பதற்றம் ஏற்படலாம். ஈகோவைத் தவிர்க்கவும். நல்ல தகவல்தொடர்புகளைப் பேணுங்கள்.

கன்னி ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – உங்கள் உடல்நலம் மற்றும் அன்றாட வழக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். வேலை அழுத்தம் அதிகரிக்கலாம், எனவே சமநிலையைப் பேணுங்கள்.

துலாம் ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – காதல் உறவுகளில் குழப்பம் ஏற்படலாம். படைப்பு வேலையில் இருந்தால் புதிய வாய்ப்புகளை பெறலாம்.

விருச்சிக ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – குடும்ப விஷயங்களில் திடீர் முடிவுகள் சாத்தியமாகும். உங்கள் தாயிடமிருந்து உங்களுக்கு ஆதரவு கிடைக்கும்.

தனுசு ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – தவறான புரிதல்கள் ஏற்படக்கூடும் என்பதால், தகவல் தொடர்புகளில் கவனமாக இருங்கள். ஒரு சிறிய பயணம் சாத்தியமாகும்.

மகர ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – நிதி ஏற்ற இறக்கங்கள் சாத்தியமாகும்; உங்கள் செலவினங்களைக் கட்டுப்படுத்துங்கள். தன்னம்பிக்கை குறையக்கூடும்.

கும்ப ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – ஆளுமை மற்றும் சிந்தனையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் சாத்தியமாகும். முக்கியமான முடிவுகளை கவனமாக எடுங்கள்.

மீன ராசிக்காரர்களுக்கு சந்திர கிரகணத்தின் தாக்கம் – மன பதட்டம் அல்லது பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கலாம். தியானம் செய்வது நன்மை பயக்கும்.

(பொறுப்பு துறப்பு: இதில் இடம்பெற்றுள்ள தகவல்கள் பொதுவானவை ஆகும். பல்வேறு ஊடகங்கள், ஜோதிடர்கள், பஞ்சாங்கம், நம்பிக்கைகளின் அடிப்படையில் எழுதப்பட்டவை. இதற்கு மதுரை மணி நாளிதழ் பொறுப்பேற்காது.)

# இந்தியா வங்கதேசம் இடையே விசா சேவை மீண்டும் தொடக்கம்!



வங்கதேசம், பிப். 22– வங்கதேசத்தில் இந்து இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் அதற்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்களால் இரு நாடுகளுக்கும் இடையே தூதரக ரீதியான பதற்றம் அதிகரித்தது.

இதனால், டெல்லி, கொல்கத்தா, அகர்தலா ஆகிய தூதரக அலுவலகங்களில் விசா சேவையை நிறுத்தி வைப்பதாக வங்கதேச அரசு அறிவித்தது.

பாதுகாப்பு பிரச்சனையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அந்நாட்டின் வெளியுறவுத்துறை ஆலோசகர் தவுஹித் ஹொசைன் கூறினார்.

இந்நிலையில், இந்தியா வங்கதேசம் இடையே 2 மாதங்களாக முடங்கியிருந்த விசா சேவை மீண்டும் தொடங்கியுள்ளது.


புதிய அரசு பொறுப்பேற்றபின் இந்தியாவுடன் சுமூக உறவை கடைபிடிக்க வங்கதேச பிரதமர் தாரிக் ரஹ்மான் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# குளுக்கோவீட்டா: இந்தியாவின் முதல் குளுக்கோஸ் லாலிபாப் 'ஆற்றலின் பாவர் பாங்க்' பிரச்சாரம் தொடக்கம்!

மதுரை, பிப். 22– விப்ரோ நுகர்வோர் பராமரிப்பு மற்றும் விளக்குகள் நிறுவனத்தின் குளுக்கோஸ் பிராண்டான Glucovita, இந்தியாவின் முதல் மற்றும் ஒரே குளுக்கோஸ் லாலிபாப்பான "குளுக்கோவீட்டா லாலிபாப்"பை ரூ.5 விலையில் அறிமுகப்படுத்தியுள்ளது. குளுக்கோஸ் மற்றும் வைட்டமின் C நிறைந்த இந்த லாலிபாப், பள்ளி, விளையாட்டு மற்றும் அன்றாட செயல்பாடுகளில் ஈடுபடும் குழந்தைகளுக்கு விரைவான ஆற்றலை வழங்கும் வகையில் "ஆற்றலின் பாவர் பாங்க்" ஆக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அறிமுகத்திற்கு ஆதரவாக வெளியிடப்பட்ட தொலைக்காட்சி விளம்பரத்தில் "ராபின்" என்ற புத்திசாலி சிறுவன், ஒரு சவாலான பிறந்தநாள் தருணத்தை குளுக்கோவீட்டா லாலிபாப்பின் ஆற்றலுடன் வெற்றிகரமாக மாற்றும் கதை காட்டப்படுகிறது. இந்த TVC, இன்றைய குழந்தைகளின் சுறுசுறுப்பையும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது.




இந்த அறிமுகம் குறித்து, எஸ். பிரசன்னா ராய், மூத்த துணைத் தலைவர் சந்தைப்படுத்தல், Wipro Consumer Care and Lighting, "குளுக்கோவீட்டாவின் நம்பகமான ஆற்றலை, குழந்தைகள் விரும்பும் புதிய வடிவத்தில் கொண்டு வருவதில் மகிழ்ச்சி" என தெரிவித்தார். ஆரஞ்சு, ஸ்ட்ராபெரி மற்றும் தர்பூசணி சுவைகளில் கிடைக்கும் இந்த லாலிபாப், 48 எண்ணிக்கையிலான பேக்காக தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் விற்பனைக்கு வந்துள்ளது.



# குளறுபடியால் ஒத்திவைக்கப்பட்ட குரூப் 2 முதன்மை தேர்வு தொடங்கியது!

சென்னை, பிப். 22– குளறுபடியால் ஒத்தி வைக்கப்பட்ட குரூப் 2 முதன்மை தேர்வு இன்று தமிழகம் முழுவதும் மீண்டும் நடத்தப்பட்டது. தமிழகம் முழுவதும் ஏராளமானோர் வந்து தேர்வு எழுதி வருகின்றனர்.



## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

# இரவு உணவிற்குப் பிறகு இந்த ஒரு பானத்தை மட்டும் குடிங்க..! உங்கள் உடல் கொழுப்பு வெண்ணெய் போல உருகும்!



நாள் முழுவதும் ஜிம் அல்லது டயட்டில் வியர்த்தாலும், சில நேரங்களில் எடை இழப்பு மெதுவாக இருக்கும். இதற்கு முக்கிய காரணம், இரவில் நமது உடலின் வளர்சிதை மாற்றம் குறைவதே ஆகும். இருப்பினும், இரவு உணவிற்குப் பிறகு உட்கொள்ளும் ஒரு சிறப்பு பானம் உங்கள் உடலின் கொழுப்பை எரிக்கும் செயல்முறையை இரவு முழுவதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும் என்று நிபுணர்கள் நம்புகிறார்கள். இயற்கை பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் இந்த மாயாஜால பானம் உங்கள் வயிற்றைச் சுற்றியுள்ள கொழுப்பைக் குறைக்க உதவும் என்பது குறித்த சில சுவாரஸ்யமான தகவல்களை பார்க்கலாம்.

**எலுமிச்சை சாறு மற்றும் தேன் பானம்**

எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலவை எடை இழப்புக்கு மிகவும் பயனுள்ள பானமாகும். எலுமிச்சை சாற்றில் வைட்டமின் சி நிறைந்துள்ளது, இது உடல் கொழுப்பை எரிக்க உதவுகிறது. தேனில் ஆக்ஸிஜனேற்றிகள் உள்ளன, இது வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. இரவு உணவிற்குப் பிறகு எலுமிச்சை சாறு மற்றும் சிறிது தேனுடன் வெதுவெதுப்பான நீரைக் குடிப்பதால் செரிமானம் மேம்படும் மற்றும் எடை இழப்புக்கு உதவுகிறது.

**இஞ்சி தேநீர்**

இஞ்சியில் இஞ்சிரோல் என்ற பயனுள்ள கலவை உள்ளது, இது உடலின் வளர்சிதை மாற்றத்தை துரிதப்படுத்துகிறது. இது கலோரி எரியும் விகிதத்தை அதிகரிக்கிறது. நீங்கள் ஒரு கப் தண்ணீரில் இஞ்சி துண்டுகளை வேகவைத்து, அதில் சிறிது எலுமிச்சை சாறு அல்லது தேனை சேர்க்கலாம். இரவு உணவிற்குப் பிறகு இஞ்சி தேநீர் குடிப்பது கொழுப்பு எரியும் செயல்முறையை துரிதப்படுத்துகிறது.

துளசி இலைகளில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. இது உடலில் இருந்து நச்சுகளை அகற்ற உதவுகிறது. துளசி டீ குடிப்பது செரிமானத்தை மேம்படுத்தி எடை குறைக்க உதவுகிறது. துளசி இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து இரவு உணவிற்கு பிறகு குடிப்பது நல்லது.

**புதினா டீ**

புதினா டீ உடலின் செரிமானத்தை மேம்படுத்த உதவுகிறது. இது வாயு, அமிலத்தன்மை மற்றும் வீக்கம் போன்ற பிரச்சனைகளை குறைக்கிறது. பெப்பர்மின்ட் டீ குடிப்பது தொப்பை கொழுப்பை மெதுவாக குறைக்க உதவுகிறது. இரவு உணவிற்கு பிறகு இதை குடிப்பது எடை குறைக்க உதவுகிறது.

**கிரீன் டீ எடை இழப்புக்கு பயனுள்ளதாக இருக்கும்**

கிரீன் டீயில் கேட்டசின் என்ற கலவை உள்ளது, இது உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. இது கொழுப்பை எரிப்பதை துரிதப்படுத்துகிறது. கிரீன் டீ குடிப்பது எடை இழக்க ஒரு எளிய மற்றும் பயனுள்ள வழியாகும். இரவு உணவிற்கு பிறகு ஒரு கப் கிரீன் டீ குடிப்பது உங்களுக்கு நல்ல பலனைத் தரும்.

இந்த பானங்கள் எடை குறைக்க உதவினாலும், வழக்கமான உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவு முறையும் அவசியம். எடை இழப்பு படிப்படியாக இருக்க வேண்டும். இந்த பானங்களை சரியான வாழ்க்கை முறையுடன் சேர்த்து பயன்படுத்துவது ஆரோக்கியமான முறையில் எடை குறைக்க உதவும். உங்களுக்கு ஏதேனும் உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால் மருத்துவரை அணுகுவது நல்லது.

# தென்மேற்கு வங்கக்கடலில் மேலும் வலுவடைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி- தமிழகத்திற்கு கனமழை எச்சரிக்கை!

சென்னை, பிப். 22–

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதியானது, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்து உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் கூறி இருப்பதாவது:–

பூமத்தியரேகைக்கு அருகில் உள்ள இந்திய பெருங்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவியது. இதன் காரணமாக நேற்று காலை ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது நேற்று காலை 8.30 மணி அளவில் தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவியது.

இந்த காற்றழுத்த பகுதியானது மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து வந்தது. இது தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் இன்று அதிகாலை 5.30 மணியளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது.

இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது தொடக்கத்தில் மேற்கு–வடமேற்கு திசை நோக்கி நகர வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. பின்னர் படிப்படியாக அடுத்த 48 மணி நேரத்தில் தென்மேற்கு வங்கக்கடலில் வடகிழக்கு திசை நோக்கி நகரும்.

இதன் காரணமாக இன்று தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தேசிய பொதுச்செயலாளர் ஆகிறார் அண்ணாமலை..?

சென்னை, பிப். 22–

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலைக்கு, பாஜக மேலிடம் மிக உயரிய தேசிய பொதுச்செயலாளர் பதவியை வழங்க தயாராகி வருவதாக டெல்லி வட்டாரங்களில் தகவல் கசிந்துள்ளன. தமிழக பாஜக தலைவர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, கடந்த சில மாதங்களாக அவருக்கு எந்தப் பொறுப்பும் வழங்கப்படாமல் இருந்தது, அரசியல் வட்டாரத்தில் பல்வேறு யூகங்களை எழுப்பியது. இந்நிலையில், கட்சியின் அகில இந்திய அளவில் கொள்கை முடிவுகளை எடுக்கும் அதிகாரமிக்க பீடத்தில் அண்ணாமலையை அமர்த்த பாஜக மேலிடம் திட்டமிட்டுள்ளது. அண்ணாமலையை பொறுத்தவரை தமிழ், ஆங்கிலம், கன்னடா, இந்தி என பல மொழிகள் அறிந்த வர். இதனால், அண்ணாம லைக்கு தேசிய அளவில் முக்கியமான பொறுப்பை வழங்கினால், நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அவருடைய பேச்சை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அமித்ஷா – பிரதமர் மோடி திட்டமிட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது.



குறிப்பாக, வரவிருக்கும் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களை எதிர்கொள்ளும் வகையில், தேசிய அளவில் துடிப்பான இளம் தலைவர்களுக்குப் பொதுச்செயலாளர் பதவிகளை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் அண்ணா மலையுடன் சேர்த்து ராம் மாதவ், அரவிந்த் மேனன், சம்பித் பத்ரா மற்றும் ரவீந்தர் ரெய்னா போன்ற ஜாம்பவான்களின் பெயர்களும் அடிபடுகின்றன. தற்போதுள்ள 6 பொதுச்செயலாளர்களில் மூவர் மாற்றப்பட வாய்ப்புள்ள நிலையில், அதில் ஒருவராக அண்ணாமலை இடம்பெறுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளதாக தெரிகிறது.

அண்ணாமலைக்கு இந்தப் பதவி உயர்வு கிடைக்கும் பட்சத்தில், தென்னிந்தியாவிலிருந்து பாஜகவின் தேசிய அரசியலில் முக்கியத்துவம் பெறும் மிக இளவயது தலைவர்களில் ஒருவராக அவர் உருவெடுப்பார். இது அவரது ஆதரவாளர்களிடையே புதிய உற்சாகத்தை பாய்ச்சியுள்ளதோடு, தமிழக அரசியலிலும் அவர் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக தேசிய அளவிலான அதிகாரத்துடன் வலம் வருவார்.

# செவிலியர்களுக்கு முக்கிய அறிவிப்பு வெளியிட்ட தமிழக அரசு!

சென்னை, பிப். 22–

தமிழக அரசு மருத்துவ மனைகளில் பணியாற்றி வரும் ஒப்பந்த செவிலியர்கள், தங்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் மற்றும் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த சில மாதங்களாக தொடர் போராட்டங்களை நடத்தி வந்தனர். குறிப்பாக, திமுக அரசு தேர்தல் வாக்குறுதியில் அளித்தபடி தங்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையோடு, அடிப்படைப் பணியாளர் உரிமைகளுக்காகவும் அவர்கள் குரல் கொடுத்து வந்தனர். இத்தகைய போராட்டங்களின் விளைவாக, தற்போது ஒப்பந்த செவிலியர்களுக்கு ஒரு மிகப்பெரிய நிம்மதி தரும் அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.



இதுவரை அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களுக்கு மட்டுமே ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுமுறை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அதே கடினமான பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த செவிலியர்களுக்கு இந்தச் சலுகை மறுக்கப்பட்டு வந்தது. இது செவிலியர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது நிரந்தரப் பணியாளர்களைப் போலவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் செவிலியர்களுக்கும் 'ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு' வழங்கத் தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த அறிவிப்பு, பல ஆண்டுகளாகப் போராடி வரும் ஒப்பந்த செவிலியர்களுக்குச் சற்று ஆறுதலையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. ஒரு பெண் பணியாளருக்கு மிக அவசியமான மகப்பேறு கால உதவியை அரசு அங்கீகரித்துள்ளது, சுகாதாரத் துறையில் ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. இந்த முடிவை வரவேற்றுள்ள செவிலியர் சங்கங்கள், தங்களது பிரதான கோரிக்கையான பணி நிரந்தரம் குறித்த அறிவிப்பையும் அரசு விரைவில் வெளியிடும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

# கிரெடிட் கார்டு பயனர்கள் கவனத்திற்கு..! ஏப்ரல் 1 முதல் 5 முக்கிய மாற்றங்கள் அமல்..!

புதுடெல்லி, பிப். 22–

ஆன்லைன் ஷாப்பிங், பயண முன்பதிவு, அதிக மதிப்புள்ள செலவுகள் என, அன்றாட வாழ்க்கையில் கிரெடிட் கார்டுகள் ஒரு வழக்கமான கட்டண முறையாக மாறிவிட்டன. கிரெடிட் கார்டு பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், நிதி பரிவர்த்தனைகளில் கண்காணிப்பை கடுமையாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



**2026 வருமானவரி விதிகள் புதிய முன்மொழிவுகள்**

2026 ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரு என்று எதிர்பார்க்கப்படும் வருமான வரி சட்ட விதிகள் 2026 என்ற வரைவு விதிகள், வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கான பல முன்மொழிவுகளை கொண்டுள்ளன. பொதுமக்கள் இதுகுறித்து தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.. இருப்பினும், விரைவில் நடைமுறைக்கு வரக்கூடிய மாற்றங்கள் குறித்து கிரெடிட் கார்டு பயனாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

**அதிக மதிப்புள்ள கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள் தகவல் அளித்தல் கட்டாயம்**

இந்த வரைவு விதிகளில் மிக முக்கியமான மாற்றம், பெரிய அளவிலான கிரெடிட் கார்டு செலவுகளைப் பற்றியது. புதிய முன்மொழிவுகளின்படி, ஆண்டுக்கு ரூ. 10 லட்சம் அல்லது அதற்கு மேல் கிரெடிட் கார்டு பில் தொகை, பணமில்லா (cash–less) முறைகளில் செலுத்தப்பட்டால் வங்கிகள் வருமான வரித்து றைக்கு தகவல் அளிக்க வேண்டும்..

ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் அல்லது அதற்கு மேல் தொகை ரொக்கமாக (cash) செலுத்தப்பட்டால் வங்கிகள், வருமான வரித்துறைக்கு தகவல் அளிக்க வேண்டும்.. இந்த நடவடிக்கையின் நோக்கம், அதிக மதிப்புள்ள செலவு முறைகளை கண்காணிப்பதும், அறிவிக்கப்படாத வருமானம் வரித்துறையின் கண்காணிப்பிலிருந்து தப்பிச் செல்லாமல் தடுப்பதும் ஆகும். அதனால், அதிகமாக செலவு செய்யும் கிரெடிட் கார்டு பயனாளர்களின் பரிவர்த்தனைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

**பான் கார்டு விண்ணப்பத்திற்கு முகவரி சான்றாக கிரெடிட் கார்டு ஸ்டேட்மெண்ட்**

வரைவு விதிகளில் இன்னொரு முக்கியமான முன்மொழிவு என்னவென்றால், கடந்த 3 மாதங்களுக்கான கிரெடிட் கார்டு ஸ்டேட்மென்ட்டை, PAN கார்டு விண்ணப்பத்தின் போது செல்லுபடியான முகவரி சான்றாக ஏற்றுக்கொள்ள அனுமதி வழங்குவது. இதனால், பாரம்பரிய முகவரி சான்றுகளை வழங்க சிரமப்படுபவர்களுக்கு ஆவணப் பணிகள் எளிதாகும்.

**வரி செலுத்த கிரெடிட் கார்டு அதிகாரப்பூர்வ கட்டண முறையாக அங்கீகாரம்**

மேலும், ஜிஎஸ்டி மற்றும் வருமானவரி செலுத்துவதற்கான மின்னணு கட்டண முறையாக கிரெடிட் கார்டுகளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது, வரி செலுத்துபவர்கள் பெரும்பாலும் டெபிட் கார்டுகள் மற்றும் நெட் பேங்கிங் முறைகளையே பயன்படுத்தி வருகின்றனர். இந்த மாற்றம் வரி செலுத்துவோருக்கு வசதியை அதிகரிக்கலாம். ஆனால், கிரெடிட் கார்டு மூலம் வரி செலுத்தும் போது, செயலாக்கக் கட்டணம் வசூலிக்கப்படலாம் என்பதையும் பயனாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

**நிறுவனங்கள் வழங்கும் கிரெடிட் கார்டுகள் வரி விதிப்பு**

ஒரு நிறுவனம் தனது ஊழியருக்கு கிரெடிட் கார்டு வழங்கி, அதன் மூலம் ஏற்பட்ட செலவுகளை நிறுவனம் செலுத்தினால், அந்தத் தொகை ஊழியரின் வருமானமாகக் கருதி வரிக்குட்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது. ஆனால், அந்த செலவுகள் முழுமையாக அலுவலகப் பயன்பாட்டுக்காகவே செய்யப்பட்டவை என்றும், அதற்கான சரியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் நிறுவனம் வைத்திருந்தால், வரிவிலக்கு பெற வாய்ப்பு உள்ளது.

**புதிய கிரெடிட் கார்டுக்கு பான் கட்டாயம்**

மேலும், எந்த நிறுவனத்திலிருந்தும் புதிய கிரெடிட் கார்டு பெற பான் எண் கட்டாயம் என்ற விதியை கொண்டு வரவும் வரைவு விதிகள் பரிந்துரைக்கின்றன. இதன் மூலம், கிரெடிட் கார்டு பயன்பாடு நேரடியாக வருமானவரி பதிவுகளுடன் இணைக்கப்படும். இதனால், ஒருவர் அறிவித்துள்ள வருமானத்துடன் அவருடைய செலவுகளை வரித்துறை எளிதாக ஒப்பிட்டு பார்க்க முடியும்.

**பயனர்கள் கவனிக்க வேண்டியது**

இவை அனைத்தும் தற்போது வரைவு முன்மொழிவுகளே; இறுதி அறிவிப்புகள் இன்னும் வெளியாகவில்லை. இருந்தாலும், இந்த விதிகள் அமலுக்கு வந்தால், கிரெடிட் கார்டு பயனாளர்கள் மீது வரி கண்காணிப்பு அதிகரிக்கலாம். அதனால், முன்கூட்டியே இந்த மாற்றங்களை அறிந்து வைத்துக்கொள்வது, எதிர்காலத்தில் சட்டப்படி இணங்க (compliance) செயல்படவும், தேவையற்ற வரி சிக்கல்களைத் தவிர்க்கவும் உதவும்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு
## பஞ்சாப் நேஷனல் பேங்க் 5138 காலியிடங்கள்

நிறுவனத்தின் பெயர்: பஞ்சாப் நேஷனல் வங்கி
அறிவிப்பு எண்: HRD/APPRENTICE/ADVT/2025–26
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: பயிற்சி பயிற்சி
காலம்: ஒரு வருடம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 5138 பயிற்சி பதவிகள்
வேலையிடும் இடம்: இந்தியா முழுவதும்
தொடக்க தேதி: 08.02.2026
கடைசி தேதி: 24.02.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://pnb.bank.in/

# யாருடன் கூட்டணி? - நிர்வாக குழு உறுப்பினர்களுடன் ராமதாஸ் அவசர ஆலோசனை!

சென்னை, பிப். 22–

பா.ம.க.வில் டாக்டர் ராமதாஸ், அவரது மகன் அன்புமணி இடையே மோதல் நீடித்து வருகிறது. கட்சி தங்களுக்கே சொந்தம் என இருவரும் கூறி வருகின்றனர். இந்த நிலையில் அன்புமணி தலைமையிலான பா.ம.க. அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்து உள்ளது. டாக்டர் ராமதாஸ் தி.மு.க. பக்கம் செல்வதா அல்லது அ.தி.மு.க. கூட்டணிக்கு செல்வதா என்ற குழப்பத்தில் இருந்து வருகிறார். தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்து வரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் தங்கள் கூட்டணியில் பா.ம.க.வை சேர்க்க எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இதனால் ராமதாஸ் எந்த பக்கம் செல்வார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

இந்த நிலையில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தலைமையில் பா.ம.க. அவசர நிர்வாக குழு கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொள்ள 21 பேர் கொண்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் தைலாபுரம் தோட்டத்திற்கு வந்துள்ளனர்.

அவர்களுடன் தேர்தலில் யாருடன் கூட்டணி அமைப்பது என்பது தொடர்பாக இன்று இறுதி கட்ட ஆலோசனையில் ராமதாஸ் ஈடுபட்டு வருகிறார். யாருடன் கூட்டணி என்பது தொடர்பான முடிவை ராமதாஸ் இன்று அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது


# தவெகவில் ஐக்கியமான அதிமுக முன்னாள் சபாநாயகர் மகன்.!!



சென்னை, பிப். 22–

தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், பிரதான எதிர்க்கட்சியான அதிமுகவுக்கு பேரிடியாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. அதிமுகவின் மூத்த தலைவரும், முன்னாள் சபாநாயகருமான தனபாலின் மகன் லோகேஷ் தமிழ்செல்வன், நடிகர் விஜய்யின் 'தமிழக வெற்றிக் கழகத்தில்' தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

தற்போது அவினாசி தொகுதி அதிமுக எம்.எல்.ஏ–வாக தனபால் பதவி வகித்து வரும் சூழலில், அவரது சொந்த மகனே மாற்றுப் பாதைக்கு சென்றிருப்பது எடப்பாடி பழனிசாமி மற்றும் அதிமுகவின் முன்னணித் தலைவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## சினிமா துளிகள்..!

# 'டிராகன்– 2' பட அப்டேட் கொடுத்த பிரதீப் ரங்கநாதன்!




இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து மற்றும் பிரதீப் ரங்கநாதன் கூட்டணியில் வெளியான டிராகன் திரைப்படம் மாபெரும் வெற்றியை பெற்றது. ரூ.100 கோடி வசூலை கடந்து இப்படம் சாதனை படைத்தது.

இந்நிலையில், டிராகன் படம் வெளியாகி ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், 'டிராகன்– 2' பட அப்டேட்டை பிரதீப் ரங்கநாதன் கொடுத்துள்ளார். 2 டிராகன் படம் கொண்ட புகைப்படத்தை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து விரைவில் என்று பிரதீப் ரங்கநாதன் பதிவிட்டுள்ளார்.

அதே போல், டிராகன் பட இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து தனது எக்ஸ் பதிவில், ''டிராகன் வெளியாகி ஓராண்டு நிறைவடைந்து உள்ளது. Self made star பிரதீப் ரங்கநாதனுடன் பணியாற்றியது சிறப்பாக இருந்தது. மீண்டும் ஒருமுறை இந்த காம்போ ஒன்றிணையவுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.



# புறநகர் ரெயில் சேவையில் குளறுபடிகள் ஏதுமில்லை: தெற்கு ரயில்வே!

சென்னை, பிப். 22–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடக்கும் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக ஏப்ரல் 5–ம் தேதி வரை கடற்கரை–தாம்பரம் –செங்கல்பட்டு வழித்தடத்தில் 40 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

எழும்பூரில் 10, 11 நடைமேடைகளில் பணிகள் நடைபெறவுள்ளதால், 5 மற்றும் 6 நடைமேடைகளில் புறநகர் ரெயில்கள் வந்து செல்லும் வகையில் தற்காலிக அட்டவணை அமலுக்கு வந்துள்ளது. இதனால் பயணிகள் கடும் அவதிப்பட்டு வந்தனர்.



இந்நிலையில், புறநகர் ரெயில் சேவையில் குளறுபடிகள் ஏதுமில்லை என தெற்கு ரயில்வே வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுதொடர்பாக, தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைபெற்று வரும் முக்கிய மறுசீரமைப்பு பணிகள் 45 நாட்கள் காலத்திற்கு திட்டமிடப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் பயணிகள், பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குமாறு தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் மனமாரக் கேட்டுக்கொள்கிறது.

இந்த முக்கிய கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளின் ஒரு பகுதியாக, சென்னை கடற்கரை–செங்கல்பட்டு பிரிவில் சில புறநகர் ரெயில் சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதும், சில சேவைகள் மாற்றி அமைக்கப்படுவதும் இடம்பெற்றுள்ளது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கவனமாக திட்டமிடப்பட்டவை ஆகும். திட்டமிட்ட காலக்கெடுவில் பாதுகாப்பாகவும் திறம்படவும் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவை அவசியமானவை.

இந்த எழும்பூர் மறுசீரமைப்பு திட்டத்தின் நோக்கம், சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தை நவீன வசதிகளுடன் கூடிய, பயணிகள் நட்பு நிலையமாக மாற்றுவதாகும். மேம்பட்ட வசதிகள். உயர்ந்த பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் சிறந்த செயல்திறன் ஆகியவற்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள்.

இந்த தற்காலிக மாற்றங்கள் பயணிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தக்கூடும் என புரிந்துகொள்கிறோம். தினசரி லட்சக்கணக்கான பயணிகளுக்கும் வருங்கால தலைமுறைகளுக்கும் நீண்டகால நன்மைகளை வழங்க இவை அவசியமானவை.

சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் சரிபார்க்கப்படாத மற்றும் தவறான தகவல்கள் பரவி வருகின்றன என்பது எங்களது கவனத்திற்கு வந்துள்ளது. குறிப்பாக, செயல்பாட்டு தோல்வி அல்லது பாதுகாப்பற்ற ரெயில் இயக்கம் குறித்த தவறான தகவல்கள் தேவையற்ற குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தக்கூடும்.

அனைத்து ரயில் இயக்கங்களும் நிலையான பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் கடுமையான கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

பயணிகள் பாதிப்பு குறித்த முழுமையான மதிப்பீட்டின் பின்னரே இந்த செயல்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. சென்னை கோட்ட ரயில்வே மேலாளர், கூடுதல் கோட்ட ரெயில்வே மேலாளர் மற்றும் செயல்பாட்டு துறை அதிகாரிகள் இணைந்து ஆலோசனை கூட்டங்களை நடத்தி, பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்தை குறைக்கும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்தியுள்ளனர்.

பயணிகள் அனைவரும் தெற்கு ரெயில்வே அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தகவல் வழிகளை மட்டுமே நம்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உங்கள் தொடர்ந்த ஒத்துழைப்பு புரிதலுடன், இந்த எழும்பூர் மறுசீரமைப்பு திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி, அனைவருக்கும் பாதுகாப்பான, திறம்பட்ட மற்றும் வசதியான பயண அனுபவத்தை உருவாக்கும் என்பதை நாங்கள் நம்புகிறோம் என தெரிவித்துள்ளது.

# தேர்தலுக்காக 'டாஸ்மாக்' கடைகளில் முன்கூட்டியே மதுபானங்கள் பதுக்கல்!



சென்னை, பிப். 22–

சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், 'டாஸ்மாக்' கடைகளில் மது விற்பனையை தேர்தல் கமிஷன் கண்காணிக்கும். அப்போது, மது வகைகளை அதிகம் வாங்கி சிக்கி கொள்ளக் கூடாது என்பதற்காக, தற்போதே, அரசியல் கட்சியினர், மதுபானங்களை வாங்கி பதுக்கி வருகின்றனர்.

இதனால் மது விற்பனை, 10 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. தமிழக அரசின் டாஸ்மாக் நிறுவனம், 4,787 கடைகள் வாயிலாக, மதுபான வகைகளை விற்கிறது. அவற்றில் தினசரி விற்பனை, சராசரியாக 150 கோடி ரூபாயாகவும், விடுமுறை நாட்களில், அதை விட அதிகமாகவும் உள்ளன.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவோருக்கு, கட்சியினர், 'குவார்ட்டர்' மது பாட்டில், பிரியாணி, 'பேட்டா' எனப்படும் தினசரிப்படியான ரொக்கம் வழங்குவது வழக்கம்.

சட்டசபை தேர்தல் வரும் ஏப்ரலில் நடக்க உள்ளது. தேர்தல் தேதி இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்பட உள்ளது. அறிவிப்பு வெளியான நாளில் இருந்து, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும். அன்று முதல் தினசரி மதுக் கடைகளில் நடக்கும் விற்பனையை, தேர்தல் ஆணையம் கண்காணிக்கும்.

மொத்தமாக, மது பாட்டில்களை வாங்கி எடுத்து சென்றால், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்வர். இது குறித்து, டாஸ்மாக் அதிகாரி கூறியதாவது:

மது விற்பனை முழுதும் கணினி மயமாக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு கடையிலும், தினமும் எவ்வளவு மதிப்பிற்கு மது வகைகள் விற்பனையாகின்றன, இருப்பில் உள்ள மது வகைகள், வசூல் தொகை உள்ளிட்ட விபரங்களை, அதிகாரிகள் இணையதளத்தில் அறிய முடியும். கடந்த சில தினங்களாக, பல கடைகளில் தினமும் சராசரியாக இரண்டு முதல் ஐந்து பெட்டிகள் வீதம், கூடுதல் மது வகைகளை வாங்குகின்றனர்.

ஒரு பெட்டியில், 180 மி.லி., உடைய, 48 குவார்ட்டர் பாட்டில் உள்ளன. இதனால் வழக்கத்தை விட மது விற்பனை, 10 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு தேர்தல் முக்கிய காரணமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

மது விற்பனை எவ்வளவு

ஒரு மதுக்கடையில், தினமும் சராசரியாக,3 லட்சம் ரூபாய் மதிப்பிலான மது வகைகள் விற்கப்படுகின்றன. கடையில் ஏழு நாட்களுக்கான, மது வகைகள் இருப்பு வைக்கப்படுகின்றன. இம்மாதத்தில் நேற்று முன்தினம் வரை, 18 லட்சம் பெட்டி பீர், 38 லட்சம் பெட்டி மது வகைகள் விற்பனையாகின. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில் விற்பனையானதை விட,10 சதவீதம் அதிகம். கடந்த ஜனவரியில், 51 பெட்டி மது, 24 லட்சம் பெட்டி பீர் விற்பனையாகின. அவை, 2025 ஜனவரியில் முறையே, 48 லட்சம் பெட்டி, 22 லட்சம் பெட்டிகளாக இருந்தன.

# நகராட்சி நிர்வாகத் துறை முறைகேட்டில் அதிகாரிகளுக்கும் தொடர்பு: அமலாக்கத் துறை மீண்டும் கடிதம்!



சென்னை, பிப். 22–

தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நடைபெற்றதாக கூறப்படும் டெண்டர் முறைகேடு மற்றும் ஊழல் விவகாரத்தில், ஐபிஎஸ் மற்றும் ஐஏஎஸ் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடிதம் அனுப்பி உள்ளது.

தமிழகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அரசு ஒப்பந்தங்கள் மற்றும் பணி நியமனங்களில் பெரும் முறைகேடுகள் மற்றும் ஊழல் நடந்துள்ளதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியிருந்தது. இது தொடர்பாகத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர், டிஜிபி மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு அமலாக்கத் துறை ஏற்கெனவே 2 முறை கடிதங்களை அனுப்பி இருந்தது.

அதில், அரசு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக டெண்டர்கள் முறைகேடாக கையாளப்பட்டு, ஒப்பந்தத் தொகையில் 7.5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை லஞ்சமாக வசூலிக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இந்த தொகை 'கட்சி நிதி' என்ற பெயரில் திரட்டப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த லஞ்சத் தொகையில் நேரடி பயனாளர்களாக திமுக கட்சியைச் சேர்ந்த சில தலைவர்கள் இருந்ததாக வும், அந்த நிதி அவர்களிடம் சென்றதாகவும் அமலாக்கத் துறை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கிறது.

இந்நிலையில், டெண்டர் முறைகேட்டில் சில ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளும் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்று அமலாக்கத் துறை தனது சமீபத்திய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. கவி பிரசாத், டி.ரமேஷ், கே.என். மணிவண்ணன், பிரபு உள்ளிட்டோர் இந்த ஊழல் செயல்பாடுகளில் முக்கியபங்காற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இவர்களின் செல்போன்களில் இருந்து கைப்பற்றப்பட்ட உரையாடல்கள் முக்கிய ஆதாரங்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அமைச்சர்களுக்கு சாதகமாக டெண்டர் நிபந்தனைகளை மாற்றியமைப்பதில் சில ஐஏஎஸ் அதிகாரிகள் துணை நின்றதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கான சீருடை கொள்முதல் ஒப்பந்தத்தை குறிப்பிட்ட ஒருவருக்கு பெற்றுத் தருவதற்காக, அடிக்கடி சர்ச்சையில் சிக்கும் ஒரு இளம் ஐபிஎஸ் அதிகாரி இடைத்தரகரை தொடர்புகொண்டதாகவும், இதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

அந்த அதிகாரி ரகசிய மற்றும் சென்சிட்டிவ் தகவல்களை மூன்றாம் நபர்களுடன் பகிர்ந்ததாகவும், இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணான செயல் எனவும் கூறப்பட்டுள்ளது. இது குறித்து தனிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமலாக்கத் துறை எச்சரித்துள்ளது.

மேலும், வசூலிக்கப்பட்டதாகக் கூறப்படும் லஞ்சத் தொகை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஹவாலா முறையில் சட்டவிரோதமாக பரிமாறப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக தமிழக காவல்துறை உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை தொடங்க வேண்டும் என்றும் ஆதாரங்கள் இருந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அந்தக் கடிதத்தில் அமலாக்கத் துறை அறிவுறுத்தியுள்ளது. நகராட்சி நிர்வாகத் துறையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் இந்த முறைகேடு விவகாரத்தில் உயர்மட்ட அதிகாரிகள் பெயர் வெளியானது அரசியல் மற்றும் நிர்வாக வட்டாரங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# தேர்தல் பணிகளை கண்காணிக்க த.வெ.க.,வில் பொறுப்பாளர்கள்!

சென்னை, பிப். 22–

த.வெ.க.,வில், சட்டசபை தேர்தல் பணிகளை கண்காணிக்க, செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, ஆனந்த் ஆகியோர் நிய மிக்கப்பட்டுள்ளனர். தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டசபை தேர்தல் அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது. நடிகர் விஜய் துவக்கி உள்ள த.வெ.க., முதன் முறையாக தேர்தலில் களம் இறங்குகிறது.



எனவே, கட்சியின் தேர்தல் பணிகளை கண்காணிக்க, முதன்மை கண்காணிப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், இணை கண்காணிப்பாளர்களை, த.வெ.க., தலைவர் விஜய் நியமித்துள்ளார். கண்காணிப்பாளர்கள் முதன்மை கண்காணிப்பாளர்களாக, த.வெ.க., பொதுச்செயலர் ஆனந்த், நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மாவட்டங்களின் தேர்தல் கண்காணிப்பாளராக ஆதவ் அர்ஜுனா; திருவள்ளூர் மாவட்டத்துக்கு முன்னாள் எம்.எல்.ஏ., பிரபாகர்; கிருஷ்ணகிரி, தர்மபுரி, நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களுக்கு முன்னாள் எம்.பி., சத்தியபாமா... சேலம், நாமக்கல் மாவட்டங்களுக்கு கொள்கை பரப்பு செயலர் அருண் ராஜ்; மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களுக்கு இணை பொதுச்செயலர் நிர்மல் குமார் ஆகியோர் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் பகுதிகளுக்கும், தேர்தல் கண்காணிப்பாளர்கள், இணை கண்காணி ப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தன்னார்வலர் புதுச்சேரி கண்காணிப்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ., சாமிநாதன்; காரைக்கால் கண்காணிப்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ., அசனா ஆகியோர் நியமிக்கப்பட்டு ள்ளனர்.

இதற்கிடையே, த.வெ.க.,வில் விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளன. விரைவில், வேட்பாளர் தேர்வுக்கான நேர்காணல் நடைபெறுகிறது. எனவே, த.வெ.க., வேட்பாளர்களுக்கு, தேர்தல் நடைமுறைகளில் உதவ, முன்னாள் அரசு அதிகா ரிகளை தன்னார்வலர்களாக நியமிக்க, கட்சி தலைமை முடிவு செய்துள்ளது.

# தி.மு.க.,வில் சேர வந்த அழைப்புக்கு ஓ.பி.எஸ் மறுப்பு!

சென்னை, பிப். 22–

தன் ஆதரவாளர்கள் சிலருக்கு, 'சீட்' ஒதுக்கும்படி, முதல்வர் ஸ்டாலினிடம், முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் விடுத்த கோரிக்கைக்கு, தி.மு.க., சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும்படி கூறப்பட்டுள்ளது. இதனால் அதிருப்தி அடைந்த பன்னீர்செல்வம், தி.மு.க.,வில் சேரும்படி வந்த அழைப்பையும் ஏற்க மறுத்துள்ளார்.

இதற்கிடையே, தன்னுடன் இணைந்து செயல்படுமாறு பன்னீர்செல்வத்திற்கு, சசிகலா அழைப்பு விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அ.தி.மு.க.,வில் இருந்து நீக்கப்பட்ட, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், அ.தி.மு., தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் என்ற அமைப்பை துவக்கி, அ.தி.மு.க.,வுக்கு உரிமை கோரி வருகிறார்.

கடந்த 2017ல், முதல்வராக இருந்த பழனிசாமியுடன், தன்னை சேர்த்து வைத்தது போல், மீண்டும் பா.ஜ., தலைமை சேர்த்து வைக்கும் என, பன்னீர்செல்வம் நம்பிக்கையுடன் இருந்தார்.

கைவிட்ட பா.ஜ., ஆனால், பா.ஜ., வேண்டுகோளை ஏற்று, தினகரனின் அ.ம.மு.க.,வை கூட்டணியில் சேர்த்துக் கொண்ட பழனிசாமி, பன்னீர்செல்வம், சசிகலா ஆகியோரை சேர்க்க மறுத்துவிட்டார். பா.ஜ.,வும் அவர்களை கைவிட்டது.

தனிக்கட்சி துவக்கினால், அ.தி.மு.க.,வில் உரிமை கோர முடியாது என்பதால், பன்னீர்செல்வத்திற்கு அடுத்து என்ன செய்வது என தெரியாத நிலை ஏற்பட்டது.

அவருடனிருந்த முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன், மருது அழகுராஜ் ஆகியோர், தி.மு.க.,வில் இணைந்து விட்டனர். ராஜ்யசபா எம்.பி., தர்மர், பழனிசாமியை சந்தித்து, அ.தி.மு.க.,வுக்கு சென்று விட்டார். முன் னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன், எம்.ஜி.ஆர்., – அ.தி.மு.க., என்ற புதிய கட்சியை துவக்கி உள்ளார்.

இதனால் தனித்து விடப்பட்டுள்ள பன்னீர்செல்வம், தி.மு.க., கூட்டணியில் இணைய உள்ளதாக தகவல் வெளியானது.

அதை உறுதிப்படுத்தும் வகையில், அவரது ஆதரவு எம்.எல்.ஏ., அய்யப்பன், சட்டசபையில் மீண்டும்



ஸ்டாலின் முதல்வராக வருவார் என பேசினார். நேற்று முன்தினம் முதல்வர் ஸ்டாலினை, சட்டசபை வளாகத்தில் பன்னீர்செல்வம் சந்தித்து பேசினார் .

அப்போது நடந்த பேச்சு மற்றும் அவருக்கு சசிகலாவிடமிருந்து வந்த அழைப்பு குறித்து, அவரது ஆதரவாளர்கள் சிலர் கூறியதாவது:

அ.தி.மு.க.,வில் மீண்டும் சேர வாய்ப்பில்லை. பா.ஜ.,வும் கைவிட்டது. த.வெ.க., உடன் கூட்டணி அமைக்கலாம் என்றால், விஜயை சந்திப்பதே சிரமமாக உள்ளது. எனவே, தி.மு.க., கூட்டணியில் தன் ஆதரவாளர்களுக்கு 'சீட்' பெற்றுத்தர, பன்னீர்செல்வம் விரும்பினார். அதற்காக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பேசினார்.

அப்போது, பன்னீர்செல்வத்தை தி.மு.க.,வில் சேருங்கள் என, முதல்வர் அழைத்துள்ளார். கட்சியில் சேர்ந்தால், பழனிசாமி போல் இடையூறு தர மாட்டோம்; உரிய கவுரவம் அளிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

ஆதரவாளர்கள் அதற்கு பன்னீர்செல்வம், 'அ.தி.மு.க.,வில் மூன்று முறை முதல்வராக இருந்த நிலையில், தி.மு.க.,வில் இணைவது சரியாக இருக்காது' என கூறி, முதல்வர் அழைப்பை மறுத்துள்ளார்.

அதேநேரம் இந்த தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. என் ஆதரவாளர்கள் நான்கு பேருக்கு, எங்கள் அமைப்பு சார்பில் போட்டியிட, 'சீட்' வழங்குங்கள் என, கோரிக்கை விடுத்துள்ளார். அதற்கு, 'உதயசூரியன் சின்னத்தில் நிற்க வேண்டும்' என, முதல்வர் கூறியுள்ளார்.

இதனால், அதிருப்தி அடைந்த பன்னீர்செல்வம், யோசித்து கூறுவதாகக் கூறிவிட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், 'நான் முதல்வராக்கிய பழனி சாமி, என்னை கட்சியில் சேர்க்க முடியாது என்கிறார்; அவருக்கு வரும் தேர்தலில் பாடம் புகட்டுவேன்' என கூறி சசிகலா, தேர்தலுக்கு ஆயத்தமாகி வருகிறார்.

தேர்தலில் போட்டியிட விரும்பும் தன் ஆதரவாளர்களிடம், தன் வீட்டில் தினமும் நேர்காணல் நடத்தி வருகிறார்.

ஏற்கனவே திவாகரன் துவக்கிய அண்ணா திராவிடர் கழகம் என்ற கட்சி வாயிலாக, த.வெ.க.,வுடன் கூட்டணி அமைக்க, சசிகலா முயற்சித்து வருகிறார்.

வரும் தேர்தலில், தனக்கு விசுவாசமாக இருந்து, தன்னால் பதவி பெற்று, இப்போது கண்டு கொள்ளாமல் இருக்கும் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் உதயகுமார், சி.விஜயபாஸ்கர், ஓ.எஸ்.மணியன், காமராஜ் உள்ளிட்டோரை தோற்கடிக்க, சசிகலா முடிவு செய்துள்ளார்.

இப்பணியில், தன்னுடன் இணைந்து செயல்படும்படி, பன்னீர்செல்வத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார். சசிகலா, பன்னீர்செல்வம் ஆகியோர் த.வெ.க., உடன் இணைந்து களம் இறங்கினால், தென் மாவட்டங்களில் அ.தி.மு.க.,வுக்கு கடும் சிக்கல் ஏற்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மைக்ரோசாப்ட் கேமிங் சிஇஓ ஆக வம்சாவளி இந்தியர் ஆஷா சர்மா நியமனம்!


புதுடெல்லி, பிப். 22–

உலகளாவிய தொழில்நுட்ப ஜாம்பவானான மைக்ரோசாப்ட், தனது விளையாட்டுப் பிரிவான Microsoft Gaming நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பை இந்திய வம்சாவளியை சேர்ந்த ஆஷா சர்மாவிடம் ஒப்படைத்துள்ளது.

**யார் இந்த ஆஷா சர்மா?**

இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் ஆஷா சர்மா, 43. இவர், மின்னசோட்டா பல்கலையின் கார்ல்சன் மேலாண்மை பள்ளியில் பட்டம் பெற்றவர். நவீன தொழில்நுட்பப் பொருளாதாரம், சந்தை, சமூக வலைதளங்கள், கிளவுட் கம்ப்யூட்டிங், செயற்கை நுண்ணறிவு என பலதரப்பட்ட துறைகளில் படிப்பும் அனுபவமும் கொண்டவர்.

இவர், மைக்ரோசாப்ட்டில் செயற்கை நுண்ணறிவு (CoreAI) பிரிவின் தலைவராக பணிபுரிந்து வந்தார். மெட்டா நிறுவனத்தின் மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் பிரிவுகளிலும் முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார். இவரது பணி பலரது பாராட்டுகளையும் பெற்றது. சிஇஓ சத்யா நாதெல்லாவின்



கவனத்தையும் ஈர்த்து இருந்தது.

**முக்கிய பொறுப்பு**

தற்போது மைக்ரோசாப்ட் கேமிங் பிரிவின் தலைவராக உள்ள பில் ஸ்பென்சர் தனது 38 ஆண்டு காலப் பணிக்குப் பிறகு ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதனால் அந்த பொறுப்பு இந்திய வம்சாவளியை சேர்ந்த ஆஷா சர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

ஏஐ தொழில்நுட்ப துறையில் அனுபவம் பெற்றுள்ள ஆஷா சர்மாவின் திறமை, கேமிங் துறையில் மாற்றத்தைக் கொண்டு வரும் என்று பல்வேறு தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர். உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவன தலைமைப் பொறுப்புகளில் இந்திய வம்சாவளியினரின் ஆதிக்கம் தொடர்வதை உலகிற்கு எடுத்துக்காட்டுவதாக இந்த நியமனம் உள்ளது.

**25வது ஆண்டு**

விஸ்கான்சினில் பிறந்த 43 வயதான ஆஷா சர்மாவை, மைக்ரோசாப்ட் சிஇஓ சத்யா நாதெல்லா பாராட்டி உள்ளார். ''கேமிங் துறையில் அடுத்தகட்ட வளர்ச்சியை எட்டுவதற்கு ஆஷாவின் அனுபவம் பெரிதும் உதவும் '' என்று சத்யா நாதெல்லா தெரிவித்து இருக்கிறார்.

2026ம் ஆண்டு மைக்ரோசாப்ட் கேமிங் பிரிவு தொடங்கி 25வது ஆண்டு நிறைவு பெறுகிறது. தற்போது எக்ஸ்பாக்ஸ் தளத்திற்கு மாதந்தோறும் 50 கோடிக்கும் அதிகமான பயனர்கள் உள்ளனர். "கேமிங் என்பது ஒரு கலை; அது மனிதர்களால் உருவாக்கப்பட வேண்டும். மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் கேமிங் பிரிவை முதன்மையான ஒன்றாக மாற்றுவதே தனது இலக்கு" என ஆஷா சர்மா தனது அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து தனது முடிவை பகிர்ந்து இருக்கிறார்.

# மார்ச் 1 முதல் திருச்சி-தாம்பரம் சிறப்பு ரயில் நிரந்தர ரயிலாக இயக்கம்!




திருச்சி, பிப். 22–

திருச்சி தாம்பரம் திருச்சி சிறப்பு ரயில்களானது (06190, 06191) நீண்டகாலமாக இயக்கப்பட்டு வருகிறது.

இந்த ரயிலானது 16808, 16807 என எண்கள் மாற்றப்பட்டு, வரும் மார்ச் 1 ஆம் தேதி முதல் நிரந்தர ரயிலாக மாற்றி இயக்கப்பட உள்ளது. இதன்படி, இந்த ரயிலானது செவ்வாய், புதன்கிழமைகளைத் தவிர வாரத்தில் 5 நாள்கள், 2 ஏசி பெட்டிகள், 8 உட்காரும் பெட்டிகள், 6 பொதுப்பெட்டிகள், 1 மாற்றுத்திறனாளி பெட்டி, ஒரு லக்கேஜ் பெட்டி என 18 பெட்டிகளுடன் இயக்கப்படும். திருச்சியிலிருந்து மார்ச் 1 ஆம் தேதி முதல் காலை 5.35 மணிக்குப் புறப்பட்டு திருவெறும்பூர், தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர், பண்ருட்டி, விழுப்புரம், திண்டிவனம், மேல்மருவத்தூர், செங்கல்பட்டு வழியாக தாம்பரத்துக்கு நண்பகல் 12.30 மணிக்குச் சென்றடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்திலிருந்து பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்பட்டு மேற்கண்ட வழித்தடங்கள் வழியாக திருச்சிக்கு இரவு 10.40 மணிக்கு வந்தடையும் என திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு திருச்சி எம்.பி. துரை வைகோ வரவேற்பு தெரிவித்துள்ளார்.

**தேவை**

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020